4. அறிவிப்புகள் - தொடர்ச்சி

(இ) உறுப்பினர்களுக்கு மதிய உணவு வழங்கல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறையின் சார்பாக சட்டமன்றப் பேரவை மண்டபத்தையொட்டிய பகுதியில் உறுப்பினர்களுக்கு மதிய உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர், vegetarian உணவுதானே?

மாண்புமிகு திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு வகையான உணவும், vegetarian உணவு, non-vegetarian உணவு, இரண்டும் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இரண்டு வகையான உணவும் வழங்கப்படுகிறது.

5. மானியக் கோரிக்கைகள், 2001-2002 விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 23—கூட்டுறவு—தொடர்ச்சி

(ஆ) கோரிக்கை எண் 34—நுகர்பொருள் வழங்கல்—தொடர்ச்சி

பிற்பகல் *12-25*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன்.

* **திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து, முஸ்லீம், கிருத்தவர்கள் ஒற்றுமையாக வாழ்வதை உலகுக்கு உணர்த்துகின்ற வகையில், திருக்கடையூர், நாகூர் தர்கா, வேளாங்கன்னி மாதா ஆகிய புண்ணியத் தலங்களைத் தன்னகத்தே கொண்ட நாகப்பட்டினம் மாவட்டம், இதய தெய்வம் புரட்சித் தலைவியின் திருக்கரங்களால் முதன் முதலில் தொடங்கப்பட்டது. அந்த மாவட்டத்திலுள்ள குத்தாலம் தொகுதியில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்து கழகம் தோன்றிய காலம் முதல் தொண்டனாகவும், பிறகு கழக மாவட்ட துணைச் செயலாளராகவும், தற்சமயம் புரட்சித் தலைவி பேரவையின் மாவட்ட இணைச் செயலாளராகவும், இரண்டு முறை ஊராட்சி மன்றத் தலைவராகவும் இருந்த என்னை குத்தாலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக்கி, இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த எங்களுடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS